செ.வெ.எண்:554 10.7.08

## பத்திரிகை செய்தி

### மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பேரூராட்சிகள் துறை செயல்பாடுகள் குறித்த ஆய்வு

10.7.2008 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் பேரூராட்சிகள் துறை செயல்பாடுகள் குறித்த ஆய்வு பேரூராட்சிகளின் ஆணையரகத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப.அவர்கள், பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர்.கே.கோபால்,இ.ஆ.ப. அவர்கள் மற்றும் பேரூராட்சிகளின் துறை உயர் அதிகாரிகள், மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள 561 பேரூராட்சிகளில் 93 சதவிகித பேரூராட்சிகளில் அதாவது 521 பேரூராட்சிகளில் திடக்கழிவுகளிருந்து தயாரிக்கப்படும் உரம் மற்றும் மண்புழு உரம், பிளாஸ்டிக் மறுசுழற்சி அலகுகளில் தயாரிக்கப்பட்ட இயற்கை சூழலுக்கு உகந்த கைப்பைகள், உரம் சேகரிக்கும் பைகள் தயார் செய்யப்படும் பொருட்கள் குறித்த கண்காட்சியை மற்றும் புகைப்பட கண்காட்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார் அலகுகள் தயார் செய்யப்படும் விதங்கள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் கேட்டறிந்தார்.

கொள்கை அறிவிப்பின்படி பேரூராட்சிகளை சுத்தமாகவும், பசுமையாகவும் வைத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி மகளிர் சுய உதவிக்குழுவினர், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியோரை ஈடுபடுத்தி, ஒவ்வொரு வீட்டிற்கும் நேரில் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியே சேகரித்தல் (Source Segregation), பல இடங்களில் தெரு வாரியாக இயற்கை உரம்(Compost)/ மண்புழு உரம் (Vermi Compost) தயாரித்தல், மறுசுழற்சிக்கு உகந்த பிளாஸ்டிக் பொருட்களை தனியே சேகரித்து வைத்தல், இயற்கை சூழலுக்கு உகந்த வகையில் தேவையான பொருட்களை தயாரித்தல், உரம் சேகரிக்கும் பைகள் தயாரித்தல் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்படுவது குறித்தும், பேரூராட்சிகளில் தயாரிக்கப்படும் இயற்கை உரம்/மண்புழு உரம், விவசாயிகளுக்கும் மற்றும் தோட்டக்கலைத்துறைக்கு விற்பனை செய்வது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் ஆய்வு செய்தார்.

மேலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை நெறிப்படுத்துவதற்காக, கல்வி நிறுவனங்கள், உணவு விடுதிகளில் சிறிய அளவிலான 50 உரக்குழிகள் அமைக்கவும்,

உணவு விடுதிகள், வணிக நிறுவனங்கள் இவற்றில் மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளை தனித்தனியே சேகரித்து வைக்கவும், மருத்துவமனை, பிராணிகள் வதை செய்யும் இடங்களிலுள்ள கழிவுகளை சேகரித்து முறையாக தீர்வு செய்யவும், 10 அம்ச வழி முறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ஒவ்வொரு வருடமும் 140 பேரூராட்சிகள் வீதம் நான்கு வருடங்களில் 561 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் எனவும், பேரூராட்சி ஒன்றுக்கு ரூ.50.00 லட்சம் வீதம் ரூ.70.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டதற்கிணங்க 2007-08 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 140 பேரூராட்சிகளில் ரூ.74.05 கோடி மதிப்பீட்டில் 1493 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 1301 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளை ஒரு மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டுமென அமைச்சர் அறிவுரை வழங்கினார். 2007-08 ஆம் ஆண்டில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்ட பேரூராட்சிகளில் ஒட்டு மொத்த துப்புரவு இயக்கம், நகரை அழகுபடுத்தும் முகாம், மருத்துவ முகாம், பசுமைப்படுத்தும் இயக்கம், குழந்தை தொழிலாளர் ஒழிப்பு, ஹெச்.ஐ.வி/எய்ட்ஸ் ஒழிப்பு போன்ற 791 எண்ணிக்கையிலான பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

2008-09 நிதியாண்டில் ரூ.77.56 கோடி மதிப்பீட்டில் 1411 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. பிற துறை திட்டங்களை ஒருங்கிணைத்து, அதிக அளவிலான நிதி திரட்டவும், அதிக பணிகளை மேற்கொள்ளவும், எடுத்துக் கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் இந்த நிதியாண்டிலேயே முடிக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

20 பேரூராட்சிகளில் ரூ.19.92 கோடி மதிப்பீட்டில் நவீன பேருந்து நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும், மேலும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையங்களில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் 40 சுகாதார வளாகங்கள் புதியதாக கட்டப்படவுள்ளதாகவும், ரூ.646.00 லட்சம் மதிப்பீட்டில் 44 பேரூராட்சிகளில் புதிய அலுவலக கட்டிடங்கள் கட்டவும், 200 பேரூராட்சிகளில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் 2000 ஒளிரும் அடர் மின்விளக்குகள் அமைக்க நடவடிக்கையில் உள்ளதாகவும், இப்பணிகள் அனைத்தையும் விரைந்து முடிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். மேலும் பேரூராட்சி துறை பொறியியல் அலுவலர்களுக்கு ரூ.105.00 லட்சம் மதிப்பீட்டில் 21

எண்ணிக்கையில் வாகனங்கள் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை பகுதி மேம்பாட்டு திட்டம் மற்றும் நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டு திட்டம் போன்ற திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டு, இத்திட்டங்களை மேலும் பல பேரூராட்சிகளில் ரூ.132.61 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அனுமதி கோரி கருத்துரு நடவடிக்கையில் உள்ளது எனவும், இதைப் போன்ற பல திட்டங்கள் பேரூராட்சிகளில் நிறைவேற்றப்படவுள்ளது எனவும் தெரிவித்தார். மேலும் அனைத்து பேரூராட்சிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டு கணினி மயமாக்கப்பட்டுள்ளதாகவும், 100 பேரூராட்சிகளில் 102 எண்ணிக்கையிலான பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பேரூராட்சிகளில் பகுதி 2 திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் (JNNURM), சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT) , ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் (IHSDP), நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டம் ( BSUP ) சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம் (SJSRY) போன்ற பல்வேறு திட்டப்பணிகளுக்காக 2007-08 நிதியாண்டில் ரூ.594.37 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டது எனவும், 2008-09 நிதியாண்டில் பேரூராட்சிகள் துறையில் தொழில் நுட்ப பணியாளர் அலகு தோற்றுவிக்கவும் மற்றும் நபார்டு திட்டத்தின் கீழ் 398 பேரூராட்சிகளில் ரூ.114.00 கோடி மதிப்பீட்டில் சாலைகள் மேம்பாட்டு திட்டம், பொது மக்கள் பயனடையும் விதத்தில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9